# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை 23 புதன்கிழமை 05.02.2025 கதிர் 118



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

யாழ் முற்றம்

Yarl Muttram

Youtube Channel






# அர்ச்சுனாவுக்கு 'பைத்தியம்'

## அவரை மனநல வைத்தியரிடம் அனுப்புங்கள் என்று சபாநாயகரிடம் தயாசிறி வேண்டுகோள்

**கொழும்பு, பெப். 05**

**"நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு உளவியல் பிரச்சினை உள்ளது. ஆகவே, அவரை மனநல மருத்துவரிடம் அனுப்புங்கள்."**

**– இவ்வாறு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.**

**நாடாளுமன்றத்தில் இன்று புதன்கிழமை சிறப்புரிமை மீறல் பிரச்சினை முன்வைத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா,**

7➤

# அநுர அரசுக்கு குடைச்சல் கொடுக்க எதிர்க்கட்சித் தலைவர்கள் தீர்மானம்

## சஜித் தலைமையில் இன்று ஒன்றுகூடிப் பேச்சு



கொழும்பு, பெப். 05

நாடாளுமன்ற விவகாரங்கள் உட்பட எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இன்று புதன்கிழமை காலை நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள

7➤

# 104 கிலோ கஞ்சாவுடன் வசமாகச் சிக்கிய மூவர்



யாழ்ப்பாணம், பெப். 05

யாழ்ப்பாணத்தில் 104 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

7➤

# மனைவியைக் கத்தியால் குத்தி கல்லால் தாக்கி கொடூரமான முறையில் கொலை செய்த கணவன்

## நாவலப்பிட்டி சம்பவத்தின் பின்னணி வெளியானது

நாவலப்பிட்டி, பெப். 05

குடும்பத் தகராறு காரணமாக கணவர் தனது மனைவியைக் கூர்மையான கத்தியால் குத்தியும், தலையில் கல்லால் தாக்கியும் கொலை செய்துள்ளார் என்று நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 1:30 மணியளவில் இந்தக் கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நாவலப்பிட்டி, செம் ரோக்

7➤



# வேலையற்ற பட்டதாரி யாழில் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 05

யாழ்ப்பாணத்தில் வேலை கிடைக்கவில்லை என்ற விரக்தியில் இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

யாழ். கைலாச பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த

7➤



# நான் இனி எங்கு சென்று பேசுவது?

## சபையில் அர்ச்சுனா எம்.பி. கேள்வி



கொழும்பு, பெப். 05

"சிறப்புரிமை மீறல் பிரச்சி னையை முன்வைப்பதற்கு எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் மனநிலை பாதிக்கப்பட்ட தயாசிறி ஜயசேகரவும், பிமல் ரத்நாயக்கவும் முரண்பட்டுக்கொண்டார்கள்.

எனது பிரச்சினை பற்றி பேசப்படவில்லை. நான் எங்கு சென்று பேசுவது?" - என்று யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சபையில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இன்று புதன் கிழமை நடைபெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தின் போது ஒழுங்குப் பிரச்சினையை முன் வைத்து மேற்கண்டவாறு அவர் கேள்வி எழுப்பினார். அவர் மேலும் உரை யாற்றுகையில்,

"எனது சிறப்புரிமை மீறல் பிரச்சினை பற்றி பேசுவதற்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில் மனநிலை பாதிக்கப்பட்ட தயாசிறி ஜயசேகரவும், பிமல் ரத்நாயக்கவும் முரண்பட்டுக் கொண்டார்கள். எனது சிறப்புரிமை மீறல் பற்றி பேசப்பிடவில்லை.

சிறப்புரிமை மீறலுக்காக எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் ஆளும் தரப்பு உறுப்பினரும், எதிர்த் தரப்பின் உறுப்பினரும் முரண்பட்டுக்கொண்டார்கள்.

எனது பிரச்சினை பற்றி பேசப்படவில்லை. நான் எங்கு சென்று பேசுவது? எனது உரிமை தொடர்ந்து மறுகக்கப்படுகின்றது?" - என்றார்.

# 4 பொலிஸ் அதிகாரிகள் அதிரடியாக பணிநீக்கம்

கொழும்பு, பெப் 05

தில்ஷான் மதுசங்க என்ற இளைஞன் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, சுமார் 6 நாட்கள் சித்திரவதை செயயப்பட்ட சம்பவம் தொடர்பில் வீரகெட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட நான்கு பொலிஸ் அதிகாரிகளின் பணிகளை இடைநிறுத்த பதில் பொலிஸ்மா அதிபர் இன்று நடவடிக்கை எடுத்துள்ளார்.

வீரகெட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தங்காலை குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி, கும்புறுபிட்டிய பல்வேறு முறைப்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் கல்கிஸ்ஸை பொலிஸ் சார்ஜென்ட் ஆகியோரே இவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நான்கு பொலிஸ் அதிகாரிகளையும் தலா 25,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும், தலா 5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறு மாத்தறை மேல் நீதிமன்றம் ஜனவரி 27 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.

மாத்தறை, மாலிம்பட பொலிஸ் நிலையத்தில் பணியாற்றியபோது தில்ஷான் மதுசங்க என்ற இளைஞன் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸ் விசேட புலனாய்வுப்பிரிவு நடத்திய விசாரணையைத் தொடர்ந்து, சட்டமா அதிபர் இந்த அதிகாரிகளுக்கு எதிராக குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்த நிலையில் வழக்கு விசாரணை பெப்ரவரி 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ)

# குறைக்கப்படவுள்ள நீர் கட்டணம்




கொழும்பு, பெப் 05

நீர் கட்டணத்தை 10 முதல் 30 சதவீதம் வரை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டண குறைப்போடு ஒப்பிட்டு, நீர் கட்டணங்களையும் குறைப்பதில் கவனம் செலுத்தப்படுவதாகவும், இது குறித்து ஆராய குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த குழுவின் அறிக்கை அடுத்த சில நாட்களுக்குள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்பு சபை தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும், பின்னர் அது தொடர்பான முன்மொழிவுகள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# சந்தோஷ் ஜா – ராஜபக்ஷ சந்திப்பு



கொழும்பு, பெப் 05

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கொழும்பு விஜேராம வீதியில் உள்ள மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் வைத்து புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசமும் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரபல மருத்துவமனையின் மோசடி அம்பலம் 40 கோடிகள் பாழடிப்பு




கொழும்பு, பெப் 05

இலங்கையின் பிரபலமான புற்றுநோய் மருத்துவமனையான கொழும்பு - மஹரகம அபேக்ஷா மருத்துவமனைக்கான நன்கொடை கணக்கில் இருந்த 40 கோடி ரூபாய் நிதி மோசடி செய்யப்பட்ட சம்பவம் அம்பலமாகியுள்ளது.

அதன்படி, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் எந்தவொரு பயனுள்ள நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படவில்லை என தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், தேசிய சுகாதார மேம்பாட்டு நிதியத்திற்கு நன்கொடையாக பெறப்பட்ட சுமார் 1 கோடியே 50 லட்சம் ரூபாய், நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்படவில்லை என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குறித்த நன்கொடைகள் பல்வேறு திட்டங்கள் நான்கிற்காக 1998 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில் பெறப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கொழும்பு ரிட்ஜ்வே ஆர்யா குழந்தைகள் மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சைக்கு தேவையான பொருட்களை வாங்க நன்கொடையாளரிடமிருந்து பெறப்பட்ட 1 கோடி ரூபாய்க்கு அதிகமான பணம், தொடர்புடைய பணிகளைச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படவில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லிட்டில் ஹார்ட் திட்டத்தின் கீழ், கொழும்பு ரிட்ஜ்வே ஆர்யா குழந்தைகள் மருத்துவமனைக்காக பத்து மாடி கட்டிடம் கட்டுதல் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்காக 62 கோடி ரூபாய்க்கு மேல் நிதி திரட்டப்பட்டிருந்தும், 2023 ஆம் ஆண்டில் அந்த பணத்தில் 8 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த தகவல்கள் அனைத்தும் தேசிய கணக்காய்வு அலுவலகம் தேசிய சுகாதார மேம்பாட்டு நிதியம் தொடர்பாக வெளியிட்ட கணக்காய்வு அறிக்கையில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# நாடாளுமன்ற உணவுக் கட்டணம் இன்று தொடக்கம் அதிகரிப்பு



கொழும்பு, பெப் 05

பாராளுமன்ற சபைக் குழுவின் முடிவின்படி, இன்று (பிப்ரவரி 5) முதல், பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் அன்றாட உணவுக்கு ரூ.2,000 செலுத்த வேண்டும்.

முன்னர் ரூ.450 ஆக நிர்ணயிக் கப் பட்ட உணவு விலை, ஆளும் கட் சியின் முன்மொழிவின் அடிப்படையில் அதிகரிக்கப்பட்டது.

புதிய விலை நிர்ணயத்தின் கீழ், பாராளுமன்ற உணவகத்தில் காலை உணவு ரூ.600, மதிய உணவு ரூ.1,200, மாலை தேநீர் ரூ.200 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவு பிப்ரவரி 1 ஆம் திகதி அமலுக்கு வந்தாலும், அது அமல்படுத்தப்பட்டதன் பின் முதல் முறையாக பாராளுமன்றம் இன்றே மீண்டும் கூடுகிறது. (ஐ)

# 28 கிலோ கேரள கஞ்சா பொதிகள் மீட்பு



கொழும்பு, பெப் 05

மாந்தை மேற்கு பிரதேச செய லாளர் பிரிவுக்குற்பட்ட விடத்தல் தீவு குளப் பகுதியில் பல அலட்சம் ரூபாய் பெறுமதியான ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகள் செவ்வாய்க்கிழமை(4) காலை அடம்பன் பொலிஸாரால் மீட் கப்பட்டுள்ளது.

மன்னார்- அடம்பன் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற அரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே 42 லட்சம் பெறுமதியுடைய, 28 கிலோ எடை கொண்ட கேரள கஞ்சாவை 13 பொதிகளாக வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவித்த அடம்பன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

(ஐ).

# உதவிகள் தொடர்பில் விசாரிக்கவும்

கொழும்பு, பெப் 05

இலங்கையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள்வெளிநாட்டு உதவிகளை எவ்வாறு கையாண்டுள்ளது என்பதை ஆராய்வதற்கு தகுந்த விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது,

இலங்கை மாத்திரம் அண்மைய ஆண்டுகளில் ருளுயுஐனு இலிருந்து மில்லியன் கணக்கான டொலர்களை ரொக்கமாகவும் மானியங்களாகும் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உலகெங்கிலும் ஏராளமான திட்டங்களுக்கு நிதியளித்துள்ள ருளு-யுஐனு மேற்கத்திய ஊடகங்களுடன் சர்ச்சையில் சிக்கியுள்ளதாகவும் அவர் தனது பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனிதாபிமான உதவி என்ற போர்வையில், ஏனைய நாடுகளின் பிரச்சினைகளையும் உறுதியற்ற தன்மையையும் உருவாக்க இந்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு வருவதாகவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். அரச சார்பற்ற நிறுவனத்தினர் தங்கள் மானியங்கள் மற்றும் உதவிகளை எவ்வாறு பயன்படுத்தினார்கள்? என்பது பற்றிய தெளிவான பதிவு எதுவும் இல்லையெனவும் ருளுயுஐனு இன் கீழ் செயற்படுத்தப்படும் இந்தத் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து விசாரணை நடத்தி, விரிவான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்வதாக நாமல் ராஜபக்ஷ அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய சலுகைகளைப் பெற்றுக்கொண்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாக விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நிதி வழங்குவதற்கான விதிமுறைகள் பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்தாலும், அவை இன்னும் செயற்படுத்தப்படவில்லை. எனவே வெளிப்படைத் தன்மையைப் பேண இந்த விதிமுறைகளைக் கொண்டுவருமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வதாக நாமல் ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# மிதி வெடி

"கல்வி எங்கள் மூலதனம்... அதைக் கட்டி....."

அந்தக் காலத்தில வந்த அருமையான பாட்டுகளில இதுவும் ஒண்டு....

தமிழர்களிடமிருந்து அழிக்க முடியாத சொத்தாக இருந்த கல்விய ஆளும் தரப்பு அடிக்கி அழிச்சது ஒரு காலம்...

இப்ப வெளியால இருந்து ஆக்கள் வரத்தேவையில்லைப் பாருங்கோ, எங்கட ஆக்களே போதும்... நான் பெரிசா - நீ பெரிசா எண்ட புடுங்குப்பாட்டால பிள்ளையள மறந்து போச்சினம் போல....

கொஞ்ச நாளைக்கு முன்னால யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில வலய மட்டச் சோதனை நடந்ததாம். அதில "ஏ.எல்" பிள்ளையளுக்குரிய "இங்கலீஸ்" சோதனைக்கு பொதுப் பேப்பராம்.... "பேப்பர்" வந்தால், "பேப்பரி"ல நிறையப் பிழையள் இருந்திருக்கு....

உதை உப்பிடியே எப்பிடிப் பிள்ளையளுக்குக் குடுக்கிறதெண்டு வாத்திமார் தலையப் பிச்சிருக்கினம்... சரி வாறது வரட்டும் ஒருக்கா வலய இணைப்பாளருக்குச் சொல்லுவம் எண்டுபோட்டு.. ஒரு வாத்தியார்... அவையளுக்கெண்டு இருக்கிற "வட்ஸ்ஸப் குறூப்"ல ஒரு "மெசேஜ்"ஐப் டிருக்கிறார்... அதுவும் பவ்வியமா... "இன்ன, இன்ன தப்புகள் இருக்குதெண்டு"..

"குறூப்"ல இருந்த பொறுப்பாளருக்குப் பத்திக் கொண்டு வந்துட்டுதாம், "பேப்பர்" அச்சடிச்சு, "ப்றூஃப்" பாக்கேக்க வராத கோபம்... "பிரிண்ட்" பண்ணி "பக்" பண்ணி பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப முதல் "செக்" பண்ணேக்க வராத கோபம்.... "வட்ஸ்ஸப் குறூப்"ல "மெசேஜ்"ஐப் பார்த்தவுடன வந்திருக்குது....

பிறகென்ன "டூ வட் ஐ சே.." தான்... ஒருத்தரும் ஒண்டையும் பற்றி "வொறி" பண்ண வேண்டாம்... "பேப்பர்" திருத்தேக்க நாங்கள் தாற "ஸ்கிரிப்ட்" படி திருத்துங்கோ.. பிள்ளையளுக்கு ஒரு நட்டமும் வராது எண்டிருக்கிறார்..... சரி எண்டு சொல்லிப் போட்டு வாத்தி மாரும் "ரெஸ்ற்"ஐ முடிச்சுப் போட்டு... "பேப்பர்" திருத்திங்துக்கு "ஸ்கிரிப்ட்" வருமெண்டு ஆ....வெண்டு பா(த்)திருக்கினம்.... இண்டைக்கு வரைக்கும் "பேப்பர் செற்" பண்ணினவரிட்டை இருந்து - வலயத்தில இருந்து பள்ளிக்கூடங்களுக்கு "ஸ்கிரிப்ட்" வரவேயில்லையாம்....

இதுக்கிடையில "உவையின்ர "ஸ்கிரிப்ட்" வாற நேரம் வரட்டும், நாங்கள் "ரிப்போர்ட்" குடுக்க வேணும், "லீவு" விட்டு அடுத்த தவணைய ஆரம்பிக்க வேணும்... எண்டு சுதாரிச்ச ஒரு சில அதிபர்மார் மட்டும் தங்கட வாத்திமாரை வைச்சு ஒருமாதிரி "ஸ்கிரிப்ட்" தயாரிச்சு, அதன்படி திருத்தி "மார்க்ஸ்" குடுத்திருக்கினம்....

அதைக் கேள்விப்பட்ட அதிகாரிமாருக்கு இன்னும் அவமானமாப் போச்சுதாம்.... அதுக்குப் பிறகு தான் "ப்ளீஸ் மார்க் த பேப்பர்ஸ் வித் யுவர் ஓண் ஸ்கிரிப்ட்" எண்டு "குறூப்" ல "மெசேஜ்" போட்டிருக்கினமாம்....

சரி அவை அப்பிடிச் செய்தால்... இந்தத் தள்ளாத வயசில உனக்கேன் உதை எண்டு தானே கேக்கிறியள்? உங்கட ஞாயம் எனக்கு விளங்குது... ஆனா ஒரு சின்ன விசியத்தைச் சொல்லிற்றுப் போறன்... சரி - பிழையைக் கூட்டிக் கழிச்சுப் பாருங்கோ.... கணக்குச் சரியா வரும்!

சோதினை எண்டால் என்ன பாருங்கோ?

படிச்ச பிள்ளையளிண்ட அடைவு மட்டத்தைப் பரிசோதிக்கிறது தானே? வாத்திமார் படிப்பிச்சது பிள்ளையளுக்குப் போய்ச் சேர்ந்ததோ எண்டதைப் பரிசீலிக்கிறது தான் உண்மையான நோக்கம்... ஆனா இங்க என்ன நடக்குது... தனக்குத் தனக்கு வேண்டாத வாத்திமார் எந்தெந்தப் பகுதி பிள்ளையளுக்குப் படிப்பிக்கேல்லயோ அந்தந்தப் பகுதியைத் தேடித் தேடிக் கேள்வியைப் போடுறது... பிறகு பிள்ளை செய்யாமல் விட்டவுடன "பாத்தியே... அவர் என்னத்தைத் கிளிச்சவர்... என்ர பேப்பரைச் செய்ய முடியாமல் தானே அவரின்ர பிள்ளை நிக்குது" எண்டு தம்பட்டம் அடிக்கிறது. உது சரியோ எண்டு சொல்லுங்களன்...

முந்தி ஒரு காலத்தில... நான் அறிஞ்சு "ஏ.எல்" பிள்ளையளுக்குப் பொதுப் "பேப்பர்" எண்டால் அது தொண்டமனாறு "பீஃல்ட்வேர்க் சென்ரர்" தான்.

அதுக்குள்ளயும் அரசியல் பூந்து விளையாடினதால.... நான் பெரிசா - நீ பெரிசா எண்ட புடுங்குப்பாடு தலை தூக்கினதால இப்ப அதிலயும் இழுபறியாப் போச்சு....

உங்களுக்குத் தெரியுமே.... வடக்கில இருந்து "பேர்பர்" எடுத்துச் செய்விச்சால் எதிர்பார்க்கை வினாக்கள் நிறைய வரும் எண்டு மேற்கில, தெற்கில இருக்கிற சிங்கப் பள்ளிக்கூடங்கள் எல்லாம் எங்கட "இங்கிலீஸ் மீடிய பேப்பர்" எல்லாம் எடுப்பிச்சுச் செய்யுறவையாம்...

ஆனா... நாங்கள் கைக்குள்ள இருக்கிற வெண்ணையை விட்டுட்டு, நெய்க்காக அடிபடுறம்.....

இதில இன்னுமொரு விசியமும் இருக்குதாம் பாருங்கோ... பொதுப் "பேர் பரை" விட்டுட்டு தாங்கள் தாங்களாப் "பேப்பர்" அடிச்சுச் சோதினை வைச்சால் தான் பள்ளிக்கூடத்தில படிப்பிக்கிற வேலைக்குப் புறம்பா... வெளியில "பிரிண்டிங் சொப்" வைச்சிருக்கிற கனபேருக்கு வாழ்வாதாரம் குடுத்ததா இருக்கும் எண்டும் யோசிக்கினம் போல....

அது சரி அரசாங்கச் சம்பளத்தை நம்பி ஆரால வாழ ஏலும்...? அங்கினேக்க "ப்ரைவேட் ரியூசன்" எண்டும், "பிரிண்டிங் சொப்" எண்டும் வைச்சு "எக்ஸ்ரா" வாக் காசு பாத்தாத் தானே... காரும் பங்களாவும் எண்டு சீரும் சிறப்புமா வாழலாம்...?

அதாவது மக்களே!

கல்வியை வியாபாரமாக்காதேங்கோ.... எங்களிட்ட இருக்கிற ஒரேயொரு அழிக்க முடியாத அருஞ் சொத்து அது தான் பாருங்கோ.... முந்தி இருந்த எங்கட அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களைப் போல அடுத்த சந்ததியக் கரை சேர்த்து விட வேண்டிய பெரும் பொறுப்பு எல்லாருக்கும் இருக்கெண்டதை மனதில வச்சுக் கொள்ளுங்கோ....

–நரமுனி–

# உண்மையில் உழைத்தவர்களைத் தேர்ந்தெடுங்கள் வேண்டுகோள் விடுத்த மல்லிகார்ஜுன கார்கே!



டெல்லி முன்பு போல வளர்ச்சிப் பாதையில் முன்னேற வேண்டுமானால் , டெல்லிக்காக உண்மையிலேயே உழைத்தவர்களைத் தேர்ந்தெடுங்கள் என காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜ/ன கார்கே தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த பதிவில் அவர் தெரிவித்துள்ளதாவது டெல்லி மக்கள் தங்கள் மதிப்பு மிக்க வாக்குகளை பதிவு செய்யுமாறு கேட்டுக கொள்கிறேன். உங்கள் ஒரு வாக்கு டெல்லியில் மாற்றத்தின் அடையாளமாக இருக்கும்.

நாங்கள் பொய்யான வாக்குறுதிகளை அளித்து உங்களை ஏமாற்றவில்லை என்றும் இதன்போது அவர் கூறியுள்ளார்.

70 தொகுதிகளைக் கொண்ட டெல்லி சட்டசபையின் தற்போதைய பதவிக்காலம் வருகிற 23-ஆம் திகதியுடன் நிறைவு பெறுகிறது.

மொத்தம் உள்ள 70 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்படுகிறது. இந்த தேர்தலில் மொத்தம் 699 பேர் போட்டியில் உள்ளனர். இதில் ஆம் ஆத்மி, பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு இடையே மும்முனை போட்டி நிலவுகின்றது.

இந்நிலையில் டெல்லி சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று காலை தொடங்கி பொதுமக்கள் அனைவரும் ஆர்வமுடன் தங்கள் வாக்குகளை செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கோடைக்கு முன்பே வெப்ப அலை வீசும் சென்னை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு எச்சரிக்கை



ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில் கடந்த சில நாட்களாக வெப்பம் அதிக அளவில் பதிவாகி வரும் நிலையில் சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புவி வெப்பமயமாவதால் கடந்த ஆண்டு அதிகபட்ச வெப்ப ஆண்டாக கண்டறியப்பட்டுள்ளது. அதே வெப்பநிலை இந்த ஆண்டும் பதிவாகும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த மாதம் 2-வது வாரத்தில் வெப்பநிலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நேற்று துனி, நர்ஸாபுரம், காக்கிநாடா மச்சிலிப்பட்டினம், நந்திகாமா, காவாலி, கர்ணூல் உள்ளிட்ட மாவட்டங்களில் அதிக அளவு வெப்பம் பதிவானது.

அதேபோல் ஆந்திரா, தெலுங்கானா கடலோர மாவட்டங்களில் 2 முதல் 3 செல்சியஸ் அளவில் வெப்பம் அதிகரிக்க தொடங்கியது. கோடை காலம் தொடங்கும் முன்பே 100 செல்சியஸை நெருங்கி உள்ளது.

இந்த மாநிலங்களில் மார்ச் மாதம் இறுதி அல்லது ஏப்ரல் மாத தொடக்கத்தில் வெப்ப அலை அதிக அளவில் வீச வாய்ப்பு உள்ளது.

வெப்ப அலை காரணமாக பாதிக்கப்படும் நபர்களின் உயிரிழப்பு எண்ணிக்கை இந்த ஆண்டு அதிகரிக்க கூடும்.

இதனால் பொதுமக்கள் தாக்கத்திலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல் ஆந்திர மாநிலத்தை ஒட்டி உள்ள சென்னை, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும் அதிக அளவு வெப்பம் பதிவாகும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.



## ஏ.டி.எம். மையத்தில் பணம் எடுக்க கட்டணம் உயருகிறது!

வங்கி ஏ.டி.எம். மையங்களில் பணம் எடுப்பதற்கான பரிவர்த்தனை கட்டணத்தை உயர்த்துவது குறித்து ரிசர்வ் வங்கி ஆலோசித்து வருகிறது.

தற்போது வாடிக்கையாளர்கள் தங்களது கணக்கு உள்ள வங்கி ஏ.டி.எம். மையங்களில் 5 முறை இலவசமாக பணம் எடுத்துக்கொள்ளலாம்.

அதேவேளை வேறு வங்கி ஏ.டி.எம்.களில் மூன்று முறை இலவசமாக பணம் எடுத்துக்கொள்ளலாம். அதன்பிறகு ஒவ்வொரு பண பரிவர்த்தனைக்கும் ரூ.21 கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

இந்த கட்டணத்தை ரூ.22 ஆக அதிகரிக்க தேசிய பேமண்ட் கார்ப்பரேஷன் பரிந்துரைத்துள்ள நிலையில் இந்த பரிந்துரையை அமுல்படுத்துவது குறித்து ரிசர்வ் வங்கி தற்போது ஆலோசித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

## வாக்குகளை பதிவு செய்யுங்கள் பிரதமர் மோடி தெரிவிப்பு!



வாக்காளர்கள் இந்த ஜன நாயக திருவிழாவில் முழு ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது மதிப்புமிக்க வாக்குகளை பதிவு செய்யுங்கள் என பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

அந்த பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது டெல்லி சட்டசபை தேர்தலில் அனைத்து தொகுதிகளுக்கும் இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது. முதல்முறையாக வாக்களிக்க இருக்கும் அனைத்து இளம் நண்பர்களுக்கும் வாழ்த்து என்று தெரிவித்துள்ளார்.

70 தொகுதிகளைக் கொண்ட டெல்லி சட்டசபையின் தற்போதைய பதவிக்காலம் வருகிற 23-ந்தேதியுடன் நிறைவு பெறுகிறது. இதனை முன்னிட்டு கடந்த மாதம் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதன்படி இன்று வாக்குப்பதிவு நடக்கிறது.

மொத்தம் உள்ள 70 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்படுகிறது. 70 தொகுதிகளிலும் மொத்தம் 699 பேர் போட்டியில் உள்ளனர். இதில் ஆம் ஆத்மி, பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு இடையே மும்முனை போட்டி நடக்கிறது. டெல்லியின் முதல்-மந்திரி அதிஷி கல்காஜி தொகுதியிலும், முன்னாள் முதல்-மந்திரி அரவிந்த் கெஜ்ரிவால் புதுடெல்லி தொகுதியிலும் போட்டியிடுகிறார்கள். அரவிந்த் கெஜ்ரிவாலை எதிர்த்து பா.ஜ.க. சார்பில் பர்வேஷ் வர்மாவும், காங்கிரஸ் சார்பில் சந்தீப் தீட்சித்தும் மோதுகிறார்கள். இவர்கள் 2 பேரும் முன்னாள் முதல்-மந்திரிகளின் மகன்கள் ஆவர். சந்தீப் தீட்சித், டெல்லியில் நீண்டகாலம் முதல்-மந்திரியாக இருந்த ஷீலா தீட்சித்தின் மகன் ஆவார்.

இதைப்போல கல்காஜி தொகுதியில் அதிஷியை எதிர்த்து பா.ஜ.க. சார்பில் ரமேஷ் பிதூரியும், காங்கிரஸ் சார்பில் அல்கா லம்பாவும் நிற்கிறார்கள். ஆம் ஆத்மியின் செல்வாக்கு மிக்க தலைவர்களை எதிர்த்து பா.ஜ.க.வும் வலுவாகவே போட்டியாளர்களை நிறுத்தி உள்ளது.

இந்நிலையில் டெல்லி சட்டசபைக்கான வாக்குப்பதிவு காலை தொடங்கி மாலை 6.30 மணி வரை நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இன்று காலை டெல்லி சட்டசபை தேர்தல் வாக்குப்பதிவு ஆரம்பம்!



இன்று காலை தொடங்கி டெல்லி சட்டசபை தேர்தல் வாக்குப்பதிவு சுமுகமாக நடைபெற்று வருகின்றது.

டெல்லியில் தற்போது ஆம் ஆத்மி ஆட்சி நடைபெற்று வரும் நிலையில் முதல்-மந்திரியாக அதிஷி உள்ளார். சட்டசபையில் பதவிக்காலம் பெப்ரவரி 23ஆம் திகதி நிறைவடைகிறது. எனவே 70 தொகுதிகளை கொண்ட டெல்லி சட்டசபைக்கு ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இந்த தேர்தலில் பா.ஜ.க., ஆம் ஆத்மி மற்றும் காங்கிரஸ் கட்சிகளிடையே மும்முனை போட்டி நிலவுகிறது. இதுதவிர தேர்தல் களத்தில் மொத்தம் 699 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அந்த வகையில், டெல்லி சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று காலை ஆரம்பித்து நடைபெற்று வருகிறது.

வாக்குப்பதிவை முன்னிட்டு டெல்லி முழுக்க பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பதற்றம் நிறைந்த வாக்குச்சாவடிகளில் கூடுதல் பொலிஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இன்று மாலை 6.00 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவுபெறும் . இதைத் தொடர்ந்து இன்று பதிவாகும் வாக்குகள் பெப்ரவரி 8-ஆம் திகதி எண்ணப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இன்னொரு முக்கியமான முயற்சியையும் கொரிய அரசு முன்னெடுத் திருக் கிறது. பல்கலைக்–கழகங்களில் காதல் பற்றிய பாடத்திட்டத்தை அரசு கொண்டு வந்திருக் கிறது. வேலையே கிடைக்காத சூழல் இருக்கும் நிலையில், காதலுக்கு என ஒதுக்க நேரமோ மன நிலையோ இல்லை என்பதே கொரிய இளைஞர்களின் பதிலாக இருக்கிறது.

# தென் கொரியாவின் மறுபக்கம்

தென் கொரியாவின் வளர்ச்சியை பொறுத்தவரை அதிக நேர வேலை, ஒரு நாளிலேயே பல மணிநேர அலுவலகப் பணி போன்ற விஷயங்கள் சொல்லப்படுகிறது. இத்தகைய வாழ்க்கையைத்தான் உழைப்பு, சுறுசுறுப்பு எனவெல்லாம் மெச்சி நமக்கு அறிமுகப்படுத்தி வைத்திருக்கிறார்கள். நன்றாக யோசித்து பாருங்கள். ஞாபகம் இருக்கிறதா? ஜப்பானியர்கள் எப்படி முன்னேறினார்கள்? சுறுசுறுப்பாலும் உழைப்பாலும் முன்னேறினார்கள். பள்ளிகளில் படித்தது மீண்டும் மனதுக்குள் தோன்றுகிறதா? கொரிய மக்களையும் கூட நமக்கு அப்படித்தான் கற்றுக் கொடுத்திருந்தார்கள். அந்த உழைப்பு, அந்த சுறுசுறுப்பு போன்ற விஷயங்களுக்கு பின் நடந்து கொண்டிருந்த வாழ்க்கை அழிப்புகளை, உறவுகளின் மீதான அவநம்பிக்கை வளர்ப்பை நமக்கு யாரும் சொல்லிக் கொடுக்கவில்லை.

ஜேங்க் யுன் ஹ்வா என்கிற பெண்ணுக்கு 24 வயது ஆகிறது. குழந்தை எதுவும் பெற்றுக் கொள்ள வேண்டாம் என்கிறார். குழந்தைப்பேற்றில் இவருக்கு விருப்பம் இல்லை. அதற்கு காரணமாக இவர் சொல்லும் விஷயம் என்ன தெரியுமா?


குழந்தைப்பேறு கொடுக்கும் வலிக்கு பயப்படுகிறார். அதனால் குழந்தை பெற்றுக் கொள்ள விரும்பவில்லை என சொல்லும் இவர் இன்னொரு விஷயத்தையும் முன் வைக்கிறார். தன்னுடைய வேலைவாய்ப்பை குழந்தைப்பேறு பாதிக்கும் என்கிறார். ஆங்கிலத்தில் உயசநநச என்று கூறுகிறோமே, தொழில் மற்றும் பணம் சம்பாதிக்கும் வாழ்க்கை, அது குழந்தைப் பேறால் கடுமையான பாதிப்பு கொள்ளும் என்றும் தொழில் வாழ்க்கை முன்னேறாமல் தேங்கிப் போகும் என்றும் கவலை தெரிவிக்கிறார்.

ஜேங்க் யுன்ஹ்வா சொல்கிறார், கொரிய நாட்டின் வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு மிக அதிகம் என. அந்த பங்களிப்பு அந்த நாட்டின் வரலாற்றில் எங்குமே பெரிதாக குறிக்கப்படவில்லை எனவும் சொல்கிறார். கொரியாவின் பொருளாதார வெற்றிக்கு அடிப்படை காரணம் குறைந்த கூலிக்கு உழைக்கும் ஆலைத் தொழிலாளர்கள். அவர்களில் பெரும்பான்மையானோர் பெண்கள். குடும்பங்களில் ஆண்கள் வேலைக்கு செல்வதற்கான ஆயத்தங்களையும் குடும்ப பராமரிப்பையும் பெண்களே கொடுக்கும் நிலையில் இருக்கிறார்கள். பெண்களை பொறுத்தவரை குடும்பமும் வேலையும் இரட்டைப் பளு என்றாகி விட்டது.





கொரிய நாட்டில் பெண்கள் ஆண்களுக்கான ஊக்க மருந்தாக பயன்படுத்தப் படுகிறார்கள் என்கிறார் யுன் ஹ்வா. நிறுவனங்களிலுமே கூட ஆண்களின் வேலைகள் குறைக்கப்பட்டு, பெண்களுக்கு அதிகம் வேலைகள் வழங்கப்படுவதற்கு முக்கியமான காரணம் பெண்ணின் உழைப்பை சுலபமாக சுரண்ட முடியும் என்பதால்தான் என்றும் கூறுகிறார் யுன் ஹ்வா. கூடவே இன்னொரு தகவலும் சொல்கிறார். ஓர் அலுவலகத்திலோ ஒரு நிறுவனத்திலோ அதிகமான எண்ணிக்கையில் பெண் ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டாலும் தலைமை அதிகாரங்கள் தெள்ளத்தெளிவாக ஆண்களிடமே இருத்தி வைக்கப்படுகிறது என்றும் கூறுகிறார். சோய் மூனும் கொரிய நாட்டை சேர்ந்தவர்தான் , அலுவலகத்தில் ஒருநாள் தலைமை அதிகாரியிடம் தான் கர்ப்பம் தரித்திருக்கும் விஷயத்தை சொல்கிறார். தலைமை அதிகாரி அந்த தகவலை ரசிக்கவில்லை. அவர் சோய் மூன்னிடம், ‘உனக்கு குழந்தை பிறந்தா, குழந்தைதான் உனக்கு முக்கியமா இருக்கும். நிறுவனத்தை இரண்டாம்பட்சமாதான் பார்ப்பாய் .. அப்படி இருக்கையில உன்னால் இங்கு சரியாக வேலை பார்க்க முடியுமா?’ என கேட்டிருக்கிறார். கேள்வி கேட்டவர் ஓர் ஆண்தான்.



அந்தக் கேள்வியை அந்த ஆண் அதிகாரி திரும்ப திரும்ப பல தருணங்களில் கேட்டதாகவும் குறிப்பிடுகிறார் சோய் மூன். ஒரு கட்டத்தில் கேட்டதும் சோய் மூனிடம் அர்ப்பணிப்புணர்வு இல்லை என கத்தியிருக்கிறான் தலைமை அதிகாரி. இத்தனை காலம் வேலை பார்த்தும் இப்போது இப்படியொரு கோபம் காட்டப்படுவதை எதிர்பாராத சோய் மூன்னுக்கு என்ன செய்வதென தெரியவில்லை. மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியிருக்கிறது. பற்றம் அதிகரித்து, கண்கள் இருண்டன. மயங்கி விழுந்திருக்கிறார்.

மருத்துவமனையில் சோய் மூன்னுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, பரிசோதனை நடந்திருக்கிறது. சோய் மூன்னுக்கு மன அழுத்தம் அதிகரிக்கத் தொடங்கி கர்ப்பச் சிதைவு நேரத் தொடங்கியிருப்பதாக மருத்துவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அச்சம்பவத்தை நினைவுக்கூரும் சோய் மூன், அது போன்ற பல நிர்பந்தங்கள் கர்ப்பத்தின் காரணமாக பெண்களுக்கு நிறுவனங்களில் சுமத்தப்படுகிறது என்றும் அதனாலேயே பல பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்ளவும் இணை தேடவும் தயக்கம் காட்டுகின்றனர் எனவும் சொல்கிறார். இத்தகைய உழைப்பு, சுறுசுறுப்பு போன்ற விஷயங்களால் காதல் மறுப்பு, உறவு மறுப்பு முதலியவை நேர்கின்றன. அவற்றின் மிக முக்கியமான விளைவு அசுரத்தனமாக வளர்ந்து இன்று மொத்த தென் கொரியாவையும் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. கொரிய நாட்டின் இன்றைய தலைமுறைக்கு ஒரு பெயர் இருக்கிறது. சேம்போ தலைமுறை! சேம்போ என்றால் மூன்று விஷயங்களை தவிர்ப்பது என பொருள். உறவு, திருமணம், குழந்தைகள்! 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 25 இலிருந்து 29 வரையிலுமான வயதில் இருக்கும் பெண்களில் 23மூ பேர் மட்டுமே திருமணம் செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவை எல்லாமும் சேர்ந்துதான் தென் கொரிய அரசைப் பல திட்டங்களை முன்னெடுக்க வைத்திருக்கிறது. குழந்தை வளர்ப்புக்கென ஆகும் செலவை குறைப்பதாக உறுதியளித்திருக்கிறது அரசு. மக்களின் தனி வாழ்க்கைகளின் தரத்தை முன்னேற்றுவதற்கான திட்டங்களை உருவாக்கப் போவதாகவும் அறிவித்திருக்கிறது. நாட்டில் இருக்கும் பொருளாதார சூழலும் திருமணம் மற்றும் காதலுறவுகள் பக்கம் இளைஞர்கள் செல்வதற்கு தடையாக இருக்கும் உண்மையை அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

இன்னொரு முக்கியமான முயற்சியையும் கொரிய அரசு முன்னெடுத்திருக்கிறது. பல்கலைக்கழகங்களில் காதல் பற்றிய பாடத்திட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. வேலையே கிடைக்காத சூழல் இருக்கும் நிலையில், காதலுக்கு என ஒதுக்க நேரமோ மன நிலையோ இல்லை என்பதே கொரிய இளைஞர்களின் பதிலாக இருக்கிறது.

## அமெரிக்காவில் முட்டை பற்றாக்குறை: திருட்டுப்போன ஒரு லட்சம் முட்டைகள்!



அமெரிக்காவில் முட்டை பற்றாக்குறை காரணாமாக முட்டைகளை திருடும் சம்பவம் அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் முட்டை பற்றாக்குறை இருந்து வருகிறது. பறவை காய்ச்சல் காரணமாக இலட்சக்கணக்கான கோழிகள் கொல்லப்பட்டதால் முட்டைக்கு பற்றாக்குறை ஏற்பட்டு விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

12 பெரிய முட்டைகள் தற்போது 7.08 அமெரிக்க டாலராக உள்ளது. இது 2 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த விலையை விட 7 மடங்கு அதிகம் என்று அமெரிக்க வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது. இந்த நிலையில் பென சில்வேனியாவில் ஒரு விநியோக மையத்தில் இருந்து ஒரு இலட்சம் முட்டைகளை கும்பல் ஒன்று திருடி சென்றுள்ளது. இதன் மதிப்பு 40 ஆயிரம் அமெரிக்க டாலர்கள். இந்த சம்பவம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஈரானுக்கு டிரம்ப் எச்சரிக்கை!

ஈரானுக்கு எதிரான கடுமையான பொருளாதாரத் தடைக் கொள்கையை மீண்டும் அமுல்படுத்தும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளேன் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஈரானுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அமெரிக்க அதிபர் டிரம்ப் மேலும் கூறுகையில் , ஈரான் என்னைக் படுகொலை செய்தால் அதை அழிக்க வேண்டும் என்று எனது ஆலோசகர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

அணு ஆயுதங்களை உருவாக்கும் விவகாரத்தில் ஈரானுக்கு எதிராக அதிகபட்ச அழுத்தம் கொள்கையை மீண்டும் அமுல்படுத்தத் திட்டமிட்டுள்ளேன்.

எல்லோரும் நான் கையெழுத்திட வேண்டும் என்று விரும்புகிறார்கள். இது ஈரானுக்கு மிகவும் கடினமானது.

நான் அதை செய்வதில் மகிழ்ச்சியடையவில்லை. ஆனால் நாம் வலுவாக இருக்க வேண்டும். ஈரானுடன் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குவோம், அனைவரும் ஒன்றாக வாழலாம் என்று இதன்போது அவர் தெரிவித்துள்ளார்.

## காசாவை அமெரிக்கா கைப்பற்றும் – அதிபர் டொனால்டு டிரம்ப் அதிரடி!

காசா பகுதியை அமெரிக்கா கைப்பற்றிக் கொள்ளும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்தார்.

இந்நிலையில், கையகப்படுத்தும் காசா பகுதியில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தத்திற்கு பிறகு அமெரிக்காவில் அதிபர் டொனால்டு டிரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு சந்தித்து பேசியதைத்தொடர்ந்து அதிபர் டிரம்ப் இந்த கருத்தை முன்வைத்துள்ளார்.

பெஞ்சமின் நேதன்யாகுவை சந்தித்த பிறகு பேசிய அதிபர் டிரம்ப், "அமெரிக்கா காசா பகுதியை எடுத்துக் கொண்டு, அங்கு ஒரு வேலையை செய்ய உள்ளது. நாங்கள் அதற்கு உரிமம் கொள்வோம். அங்குள்ள வெடிக்காத வெடிகுண்டுகளை பாதுகாப்பாக அகற்றுவோம். நலப்பரப்பை சீர்ப்படுத்துவோம்."

"இடிந்துபோன கட்டிடங்களை அகற்றுவோம். பொருளாதார வளர்ச்சியை கொண்டுவந்து, எண்ணற்ற வேலைவாய்ப்பை உருவாக்குவோம். அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுப்போம்," என்று கூறினார். போரால் பாதிக்கப்பட்ட காசாவில் இருந்து பாலஸ்தீனியர்கள் வெளியேறி எகிப்து அல்லது ஜோர்டான் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்ல வேண்டும் என்று அதிபர் டிரம்ப் மீண்டும் வலியுறுத்தி உள்ளார்.




# பாடசாலையில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் பத்து பேர் பலி!

சுவீடன் நாட்டின் தலைநகர் ஸ்டாக்ஹோமிலிருந்து மேற்கே சுமார் 200 கிமீ தொலைவில் அமைந்துள்ள ஓரேப்ரோ நகரில் வயது வந்தோருக்கான பாடசாலை அமைந்துள்ளது.

கேம்பஸ் ரிஸ்பெர்க்ஸ்கா என்று அழைக்கபபடும் இந்தப் பாடசாலையில் , 20 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கிறது.

விடுமுறை காரணாமாக மாணவர்கள் பெரும்பாலானோர் தேர்வு முடிந்ததை அடுத்து தங்களின் வீடுகளுக்கு திரும்பினர்.

எனினும் ஒரு சில மாணவர்கள் பாடசாலையில் தங்கியிருந்தனர். இந்த நிலையில் இந்த பாடசாலைக்கு வந்த மர்ம நபர் ஒருவர் அங்கிருந்தவர்களை துப்பாக்கியால் சரமாரியாக சுட்டதில் 10 பேர் பலியானார்கள்.

அதை தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடத்திய அந்த நபர் தன்னை தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார். துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் யார்? இந்த சம்பவத்தின் பின்னணி என்ன? என்பது குறித்து இதுவரையில் எந்த தகவலும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்சீனக்கடல் பகுதியில் பிலிப்பைன்ஸ் அமெரிக்கா மீண்டும் கூட்டுப்போர் பயிற்சி!

தென்சீனக்கடல் பகுதியில் பிலிப்பைன்ஸ்-அமெரிக்கா இடையில் மீண்டும் கூட்டுப்போர் பயிற்சி இடம்பெற்று வருவதாக சர்வதேச வட்டாரங்களில் இருந்து செய்தி வெளியாகின.

பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தென்சீனக் கடல் பகுதி முழுமைக்கும் சீனா உரிமை கொண்டாடுகிறது. அதேசமயம் பிலிப்பைன்ஸ், மலேசியா, தைவான் உள்ளிட்ட நாடுகளும் அந்த பகுதிகளுக்கு உரிமை கோருகின்றன. எனவே அந்த நாடுகளுக்கும், சீனாவுக்கும் இடையே அவ்வப்போது அங்கு மோதல் ஏற்படுகிறது. குறிப்பாக அங்கு செல்லும் பிலிப்பைன்ஸ் மீன்பிடி படகுகள் மீது சீன கடற்படையினர் அவ்வப்போது தாக்குதல் நடத்துகின்றனர்.

இந்த விவகாரத்தில் பிலிப்பைன்சுக்கு ஆதரவாக அமெரிக்காவும் களமிறங்கியது. எனவே சர்ச்சைக்குரிய அந்த பகுதியில் பிலிப்பைன்சுடன் இணைந்து அமெரிக்கா கூட்டுப்போர் பயிற்சியை நடத்துகிறது.

இதற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. ஆனால் அதனை பொருட்படுத்தாமல் இரு நாடுகளும் நேற்று மீண்டும் கூட்டுப்போர் பயிற்சியை தொடங்கின. இதில் அமெரிக்காவின் பெப்ரவரி குண்டுவீச்சு விமானங்கள் மற்றும் எப்.ஏ-50 போர் விமானங்கள் போன்றவை ஈடுபடுத்தப்பட்டதாக பிலிப்பைன்ஸ் விமானப்படை செய்தித்தொடர்பாளர் மரியா கான்சுலோ தெரிவித்துள்ளார்.



## அநுர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

நாடாளுமன்றத்திலும் வெளியிலும் கூட்டாக இணைந்து செயற்படுவது தொடர்பாக எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வது இந்தக் கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாகும்.

இதன் மூலம் பலமான நாடாளுமன்ற நடவடிக்கைகளைக் கொண்டமைந்த நாடாளுமன்றத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்றும், அரசின் சிறந்த தீர்மானங்களுக்கு ஆதரவளிப்பது போலவே, நாட்டு மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் சகல நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்பை வெளியிட்டு மக்கள் பக்கம் நாம் முன்னிற்போம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு தெரிவித்தார்.

நாடாளுமன்றக் குழுக்களில் கவனம் செலுத்தி அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இங்கு சகல கட்சித் தலைவர்களும் தமது கருத்துக்களை எடுத்துரைத்து சுட்டிக்காட்டினர்.

கடந்த ஜனவரி 29ஆம் திகதியும் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கூடி இதேபோன்ற கலந்துரையாடலை நடத்தியதோடு, இன்று நடைபெற்ற கலந்துரையாடலும் இதன் தொடர்ச்சியாகும்.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த கட்சித் தலைவர்களான கயந்த கருணாதிலக (எதிர்க்கட்சியின் பிரதம கொறடா), ஜே.சி. அலவதுவல (எதிர்க்கட்சியின் பிரதி அமைப்பாளர்), அஜித் பி. பெரேரா (எதிர்க்கட்சியின் பிரதி அமைப்பாளர்), ரிஷாத் பதியுதீன், நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர, தயாசிறி ஜயசேகர, ரவி கருணாநாயக்க, ஜீவன் தொண்டமான், சிவஞானம் சிறீதரன், ப.சத்தியலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரவூப் ஹக்கீம், நிசாம் காரியப்பர், வேலுசாமி இராதாகிருஷ்ணன், அனுராத ஜயரத்ன, டி.வீ.சானக மற்றும் காதர் மஸ்தான் முதலானோர் கலந்துகொண்டனர்.

## மனைவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியைச் சேர்ந் கயானி தில்ருக்ஷி குமாரி என்ற மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

மேற்படி பெண்ணைக் கொலை செய்தார் எனக் கருதப்படும் பெண்ணின் 42 வயதான கணவர் நேற்றுக் காலை நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

மேற்படி தம்பதியினரின் மூன்று குழந்தைகளும் நாவலப்பிட்டியின் பல்லேகம பகுதியில் வசித்து வந்தனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பெண்ணின் கணவருக்குத் தனது மனைவியின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டதால் அவர்கள் கடந்த மூன்று மாதங்களாகப் பிரிந்து வசித்து வந்துள்ளனர் .

இந்தக் காலப்பகுதியில் மேற்படி பெண் கொழும்பு பகுதியில் வேலை செய்து வந்தநிலையில், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தனது திருமணமான மகளின் வீட்டுக்கு வந்திருந்த சந்தர்ப்பத்தில் சந்தேகநபர் மனைவியைச் சமாதானம் செய்யும் நோக்கத்துடன் தனது ஓட்டோவில் மனைவி இருக்கும் இடத்துக்குச் சென்றுள்ளார் .

இந்தச் சந்தர்ப்பத்தில் மனைவி யாரோ ஒரு நபருடன் தொலைபேசியில் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டதும், கோபமடைந்த அவர், வாக்குவாதத்தில் ஈடுபட்டு, தான் கொண்டு வந்திருந்த கத்தியால் அவரைத் தாக்கியுள்ளார்.

கத்தி உடைந்ததால்,மேலும் ஒரு கத்தியை எடுத்து தனது மனைவியைக் குத்தியுள்ளதோடு. காப்பாற்ற வந்த தனது மகளையும் கத்தியால் தாக்கி, பின்னர் ஒரு பெரிய கல்லை மனைவியின் தலை மீது போட்டுள்ளார்.

சந்தேகநபருக்கும் கத்திக்குத்து காயங்கள் ஏற்பட்டுள்ளதால், அவரும் அவரது மகளும் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வேலையற்ற..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கவேல் விபுசன் (வயது 28) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மேற்படி இளைஞர் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை நிறைவு செய்தவர். இருப்பினும் இரண்டு வருடங்களாக வேலை கிடைக்காத காரணத்தால் நேற்று செவ்வாய்க்கிழமை தனது வீட்டில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## 104....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவில் இருந்து இரண்டு படகுகளில் யாழ். உதயபுரம் கடற்கரைப் பகுதிக்கு கஞ்சா போதைப்பொருள் கடத்தி வருவதாக மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதியில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கண்காணிப்பை மேற்கொண்டனர்.

அதன்போது இரண்டு படகுகளில் கஞ்சாவைக் கடத்தி வந்த உதயபுரம் பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்ததுடன் அவர்களிடம் இருந்து 104 கிலோ கிராம் கேரள கஞ்சா போதைப்பொருளை மீட்டனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## அரச்சுனாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட ஒருசில விடயங்களைச் சுட்டிக்காட்டி ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“நாடாளுமன்ற உறுப்பினரான இவரின் (அர்ச்சுனாவை நோக்கி) செயற்பாடுகள் தொடர்பில் எங்களுககுப் பிரச்சினைகள் உள்ளன. இவர் உங்களை (சபாநாயகரை) நோக்கி வெட்கம் என்று தகாத வார்த்தைகளைப் பிரயோகிக்கின்றார்.

அத்துடன் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான விடயம் என்றும் கூறுகின்றார். இங்கே சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடுகள் கிடையாது. இங்கே சிறுபான்மை என்று நாங்கள் எவரையும் கதைப்பதில்லை. பெரும்பான்மை என்று எவரும் செயற்படுவதில்லை.

இவ்வாறான கருத்துக்களுக்கும், செயற்பாடுகளுக்கும் சபையில் இடமளிக்க வேண்டாம். இவருக்கு (அர்ச்சுனாவுக்கு) தலையில் பிரச்சினை உள்ளது. மனநலம் பாதிக்கப்பட்டவர். இவரை மனநல மருத்துவரிடம் அனுப்புங்கள் என்று வலியுறுத்துகின்றேன்.” – என்றார்.

## லசந்த படுகொலை விவகாரம்:

# சட்டமா அதிபரின் பரிந்துரை குறித்து மீளாய்வு செய்வதற்கு அரசு தீர்மானம்

‘சண்டே லீடர்’ பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலைச் சம்பவத்தின் சந்தேகநபர்களை விடுதலை செய்யலாம் என சட்டமா அதிபர் பரிந்துரை செய்துள்ளமை குறித்து அரசு ஆராயும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இந்த விவகாரத்தை மூடிமறைக்கும் நோக்கம் எதுவும் அரசுக்கு இல்லை. குற்றவாளிகளை விடுதலை செய்யும் நோக்கமும் இல்லை. இந்த விவகாரத்தை முழுமையாக ஆராய்ந்து இந்த நாட்டு மக்களுக்கு நீதி வழங்குவோம். மக்கள் வழங்கிய ஆணையை அவமதிக்கமாட்டோம். சில யதார்த்தபூர்வமான நெருக்கடிகள் காரணமாகவே சில விசாரணைகள் தாமதமாகின்றன. அரசின் தலையீடுகளால் தாமதமாகவில்லை.” - என்றார். இதேவேளை, ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான ஏனைய குற்றச் செயல்களுக்கு நீதி கோரி சுதந்திர ஊடக இயக்கமும் ஏனைய ஊடக நிறுவனங்களும் கறுப்பு ஜனவரியை அனுஷ்டிக்கும் தருணத்தில், லசந்த கொலை வழக்கில் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மூவர் விடுதலை செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டு சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க கையொப்பமிட்ட கடிதம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

# தென் கொரியாவின்......

(5ஆம் பக்த் தொடர்ச்சி...)

மனிதம் கொண்டிருக்கும் அத்தனை அசிங்கங்களையும் தாண்டி நம்மை இயங்க வைக்கும் காரணம் காதல். ஒரு பெண்ணை,ஓர் ஆண் என்ற அகங்காரம் கடந்து நான் சந்திக்கும் புள்ளி காதல். இன்னொரு உயிரை சாதியற்று, மதமற்று, இன, மொழி பேதங்களற்று சக தோழமையாக வாழ்க்கையை பகிர்ந்தளிக்க வைக்கும் அச்சாரம் காதல். மனிதத்தின் மகோன்னதத்தை கூட நாம் தொலைக்கும் கட்டத்தை அடைந்திருக்கிறோம். கொரியா மட்டுமின்றி உலகம் முழுவதுமே காதலையும் உறவையும் மறுக்க பல விஷயங்களை கண்டறிந்து வைத்திருக்கிறோம். காதலை மறுத்து உழைப்புக் கருவியாக மட்டுமே நம்மை பார்க்கும் ஒரு சமூகத்தை படைத்து விட்டோம். அது நம் நகக்கண் வழியாக கை, கால், உடல் அனைத்தையும் இரும்பாக்கி இறுதியில் இதயத்தையும் இரும்பாக்க முயன்று கொண்டிருக்கிறது.

தென்கொரிய ஆண்களுக்கு பயமுறுத்தும் கேள்வி ஒன்று இருக்கிறது. ‘எப்போது கல்யாணம்?’. ஆண், பெண் என்ற பேதமின்றில் 30 வயதை நெருங்க தொடங்கியதுமே குடும்பத்திலிருந்து வரும் கேள்வி. இக்கேள்வி அச்சுறுத்துவதாக சொல்கிறார்கள் தென்கொரிய இளைஞர்கள். மிகப்பெரும் மன அழுத்தத்தை கேள்வி கொடுப்பதாக சொல்கிறார்கள். ஆண்கள், பெண்களைக் கண்டால் பயப்படுகின்றனர். பெண்கள், ஆண்களே சுமையென கருதுகிறார்கள். திருமணம் செய்து கொள்வதும், குழந்தைகள் பெற்றுக் கொள்வதும் அவசியமில்லாத விஷயங்களாக மாறிக் கொண்டிருக்கிறது. அடிப்படையான காரணம் ஒன்று இருக்கிறது. இணை தேடி திருமணம் செய்து கொண்டு குழந்தை பெற்றுக் கொண்டு குழந்தையை வளர்ப்பது என்பதெல்லாம் மிகப் பெரும் பொருளாதார சுமை என்ற கருத்துக்கு இன்றைய தலைமுறை வந்துவிட்டது. அலுவலகங்களே கதி என்று கிடைக்கும் வாழ்க்கைமுறையில் தனி வாழ்க்கை என யோசிப்பதற்கு வாய்ப்பே இல்லை என நினைக்கிறார்கள்.

ஒவ்வொரு தென் கொரியனும் அமெரிக்கனை விட 250 மணி நேரங்கள் அதிகம் வேலை வாங்கப்படுகிறான். ஜேர்மனியனை விட 424 மணி நேரங்கள் அதிகம் வேலை வாங்கப்படுகிறான். வேலையில்லா திண்டாட்டமும் குறைவான ஊதியமும் யதார்த்த வாழ்விலிருந்து மனிதர்களை விலக்கி வைத்திருக்கிறது. 68மூ தென் கொரியர்கள் அவர்களின் வேலை வாழ்க்கையையே முக்கியமென கருதுகிறார்கள். 47% மேலான இளைஞர்கள் பொருளாதார சுமைகளை பற்றி கவலைப்படுகிறார்கள். அரசாங்கமும் குழந்தைப்பேறுக்கான உதவித் திட்டங்கள் பலவற்றை அறிவித்து பார்த்தது. திருமணம், உறவு போன்றவற்றால் ஏற்படும் பொருளாதாரச் சுமையை குறைப்பதற்கான பொருளாதார உதவித் திட்டங்களையும் கொண்டு வந்தது. எந்த பலனும் இல்லை. இளைஞர்களிடம் உறவுக்கான தேவையைக் காட்டிலும் அது கொடுக்கும் பயமே அதிகமாக இருக்கிறது.

தென் கொரியா உலகின் ஏதோ வொரு மூலையில் இருக்கிறது என நாம் பொருட்படுத்தாமல் இருந்துவிட முடியாது. தென்கொரியாவை போல் வளர்ச்சியையும் வல்லரசுக் கனவையும் கொண்டிருக்கும் எல்லா நாடுகளிலும் தென் கொரியாவின் நிலை வரும் சாத்தியங்கள் அதிகம். சமூகவியல் ஆய்வாளர்கள் இளைஞர்களிடம் காணப்படும் காதலை மறுக்கும் நிலையை பற்றி சொல்கையில், சமூக அமைப்புகளும் நிறுவனங்களும் பராமரிக்கப்படுவதில்லை என்கின்றனர். ஒரு நாட்டில் ஏற்படும் வளர்ச்சி அந்த நாட்டின் மக்களை புறக்கணித்து நிகழ்வதாக இருக்கக் கூடாது. அப்படி அது நேர்கிறது எனில், அந்த நாட்டின் அரசு மக்களுக்கு வேலை பார்க்கவில்லை என்று அர்த்தம். குறைந்த எண்ணிக்கையில் இருக்கும் பணக்காரர்களின் நலனுக்கு மட்டுமே வேலை செய்வதாக புரிந்து கொள்ள வேண்டும்.

ஓர் இளைஞன் இயற்கையின் அடிப்படையான காதலையே மறுக்கும் நிலைக்கு செல்கிறான் எனில், அவன் வசிக்கும் நாட்டின் அரசு அவனுக்காக இயங்கவில்லை என பொருள். அவனுடைய இயல்பை அந்த அரசு நசுக்குகிறது என அர்த்தம். மாறாக அந்த அரசு அவனுடைய பொருளாதாரச் சுமையை அகற்றியிருக்க வேண்டும். வேலையை பற்றிய பதற்றம் இல்லாமலாக்கும் வகையில் வேலையை உறுதிப்படுத்தி இருக்க வேண்டும். நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்தபட்ச ஊதியத்தை அவர்களின் அடிப்படை வாழ்க்கைத் தேவைகளை கருதி நிர்ணயித்திருக்க வேண்டும். குழந்தைப்பேறு, காதல் போன்ற விஷயங்களில் தலையிடும் அளவுக்கு செயல்படும் நிறுவனங்களை ஒடுக்கியிருக்க வேண்டும். அந்த நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்களின் நலனை மேம்படுத்தும் சட்டவழிகளை உருவாக்கி இருக்க வேண்டும்.

இயல்பான காதலை கண்டடைய நம் பொருளாதாரச் சூழல் தடையாக இருக்கிறதெனில், அந்த பொருளாதாரச் சூழலை புறக்கணிக்க வேண்டும். ஏனெனில் தனி மனித வாழ்க்கையைக்கு மனிதமே அடிப்படை. பொருளாதாரம் அல்ல. மனிதத்துக்கு காதலே அடிப்படை. காதலை புறக்கணிக்க சொல்லும் அரசியலும் பொருளாதாரமும் சமூகமும் மனிதத்துக்கு விரோதமானது. அவற்றை நாம் அடையாளம் கண்டு புறக்கணிக்க வேண்டும் என்பதே மனிதப் பரிணாம வரலாறு நமக்கு வைக்கும் கோரிக்கை!








இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.02.2025 இல் வெளியிடப்பெற்றது.